2021 செப்டம்பர் 9]

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, 1987 ஆம் ஆண்டு, சமூக நீதிப் போராட்டங்களில் உயிர் நீத்த 21 தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்றும், அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் அறிவித்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தி.மு.க-வின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சருமான திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு அரங்கம் மற்றும் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்கு ரூ.2 கோடியே 60 இலட்சம் ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

இறகு பந்து ஆடுகளம்

***1766—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி நகர்ப் பகுதியில் இறகு பந்து ஆடுகளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, நகர்ப் பகுதியில் இறகு பந்து ஆடுகளம் அமைக்கும் திட்டம் அரசின்

பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சியில், 200–க்கும் மேற்பட்ட நகர்ப் பகுதிகளில், 6000–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற இளைஞர்களும், இளம் பெண்களும், online விளையாட்டில் ஈடுபடுவதிலும் மற்றும் social media–க்களில் மூழ்குவதிலுமிருந்து தடுக்கும்பொருட்டு, அவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடும்வகையில், ஓர் இறகு பந்து ஆடுகளம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். மேலும், அந்தப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான பொது இடங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, துடிப்பாகச் செயல்படுகின்ற சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு நேர்மறையான பதிலை எதிர்பார்க்கிறேன். அந்த இறகு பந்து ஆடுகளத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டமானது, விளையாட்டு வீரர்கள் நிரம்பப் பெற்ற மாவட்டமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அய்யா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், கடலூர் மாவட்டத்திற்கென்று மாவட்ட அளவில், ஒரு மிகப் பெரிய விளையாட்டரங்கத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்.

முற்பகல் 10–50

அந்த அரங்கத்திற்கு 17–1–1975 ஆம் ஆண்டு பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா விளையாட்டரங்கம் என்று

2021 செப்டம்பர் 9]

பெயர் சூட்டி, அந்த விளையாட்டு அரங்கத்தைத் திறந்து வைத்து, மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிட்டத்தட்ட 46 ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்த விளையாட்டு மைதானத்தை, மாநில அளவில் பயன்படக்கூடிய அளவில் வடிவமைத்தார். அதில் 400 மீட்டர் தடகள ஓடு பாதை, கால்பந்து ஆடுகளம், வலைப்பந்து ஆடுகளம், கூடைப்பந்து ஆடுகளம், கையுந்துபந்து ஆடுகளம், கபடி ஆடுகளம், பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம், நடைபயிற்சிப் பாதை, திறந்தவெளி குத்துச்சண்டை வளையம், செயற்கைஇழை tennis *ஆடுகளம்,* cricket *மைதானம் இப்படி பல்வேறு வசதிகளை மாண்புமிகு தலைவர் கலைஞர் ஐயா அவர்கள் அந்த மைதானத்திற்காக ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். கிட்டத்தட்ட 46 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற அந்த விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப் பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்தார்கள். அந்த அடிப்படையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலிருந்து அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்துவதற்காகவும். புதிய* synthetic *மைதானம் அமைக்கவும்,* drainage *வசதி மற்றும்* hockey *மைதானம் அமைப்பதற்காகவும், 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருத்துரு அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், கடலூர் மாவட்டம், அறிஞர் அண்ணா விளையாட்டரங்கத்தை மேலும் தரமுயர்த்துவதற்காகவும், Multi-purpose Indoor Stadium *அமைப்பதற்காகவும் 17 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதற்கான கருத்துருவும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு மிகச் சிறந்த விளையாட்டு வீரர், மிகச் சிறந்த பயிற்சியெல்லாம்*

மேற்கொள்ளக்கூடியவர். அப்படிப்பட்ட அவர்கள், நெய்வேலியில், Neyveli Lignite Corporation-க்கு எதிர்ப்பகுதியில் இருக்கின்ற ஊராட்சியில், அது ஊராட்சியாக இருந்தாலும், அதிகமான மக்கள் வசிக்கக்கூடிய பகுதியாக இருப்பதாலும், அங்கு ஓர் இறகு பந்து விளையாட்டு மைதானம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, ஆடுகளம் அமைப்பதற்குத் தகுதியான இடம் தேர்வு செய்து, அதனை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2009 ஆம் ஆண்டு காலகட்டத்தில் துணை முதல்வராக இருந்தபோது, ஓர் உடற்பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்திருக்கிறார்கள். அதில் இருக்கிற உபகரணங்கள் 12 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால், அவையெல்லாம் பழுதடைந்துவிட்டன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து, அந்த உபகரணங்களையெல்லாம் புதுப்பித்துத் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதுபோல அங்கிருக்கின்ற இறகு பந்து ஆடுகளத்தையும் விரைவிலே திறந்து வைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்பொழுது திறந்து வைப்பீர்கள், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த கைதட்டை பார்த்தவுடனே தெரிகிறது. நல்ல பதிலைச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அது. மாண்புமிகு*

2021 செப்டம்பர் 9]

சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகம் என்பது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கட்டுப்பாட்டில் வருகின்ற பகுதியாகும். ஆகவே, 2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனால்தான் நல்ல பதிலைச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேன்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பதற்காக, உடற்பயிற்சிக் கூடம் அமைத்தார்கள். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, கடந்த காலத்தில் நாங்களெல்லோரும் அதில் பயிற்சிகள் பெற்றோம். இந்தக் கோரிக்கை சட்டமன்ற உறுப்பினர் வாயிலாக வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுசென்று, அதனை புதிய உடற்பயிற்சிக் கூடமாக மாற்றுவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைத் தலைவர் என்கிற முறையில்* NOC *தந்துவிடுகிறேன். நல்லபடியாக செய்துகொடுத்துவிடுங்கள். அவ்வளவுதான். பணத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வாங்கிக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, அன்றைக்கு அவைக் குழு உறுப்பினராக இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுக்கெல்லாம் அந்த வாய்ப்பினை பணியாற்ற தந்தார்கள். அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே புதிய இறகு பந்து மைதானம் அமைக்கப்பெற்றிருக்கிறது. அந்த மைதானத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, திறந்து வைத்து, நமது சட்டமன்ற உறுப்பினர்கள் தினந்தோறும் இறகு பந்து*

விளையாட்டுப் பயிற்சி மேற்கொள்வதற்கான அனுமதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது சட்டமன்ற உறுப்பினர்கள் Stadium, இறகு பந்து மைதானத்தை பயன்படுத்துவதற்கு, அதற்கான பயிற்சியாளர்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்கின்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவில் உரையை நிறைவு செய்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை உள்ளிட்ட இடங்களில் மேற்கொள்ளப்படும் அகழாய்வுப் பணிகள், திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம் அமைத்தல், அண்டை மாநிலங்கள் மற்றும் அயல் நாடுகளின் தொல்லியல் வல்லுநர்கள் துணையோடு ஆய்வுகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உணர்வை நமக்கெல்லாம் ஏற்படுத்திய தமிழினத் தலைவர் கலைஞர் போற்றிய செம்மொழியாம் தமிழ்மொழியின் பெருமையை, உலகத்துக்கு நாகரிகத்தையும், பண்பாட்டையும் கற்றுக்கொடுக்க,*